# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.62/2012 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | மங்கையர்கரசி க.பெ. நடராஜன் |
| தேதி | :- | 07–04–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் அந்த விற்பனைக்கான ஒப்பந்தத்தை கூட்டாண்மை நிறுமத்தின் சார்பாக நான் செய்துகொள்வதற்கு எனக்கு மற்ற கூட்டாளிகள் அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றியது சம்மந்தமான விவரமோ அது எப்போது நிறைவேற்றப்பட்டது என்பது சம்மந்தமான விவரமோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்பட்டபோதே அதில் எனக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை ஒப்பந்தத்தை இந்த வழக்கில் நான் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் வழக்குச் சொத்து சம்மந்தமான உரிமைமூல ஆவணங்களை பரிசீலித்தும் அதுச் சம்மந்தமாக வழக்குரைஞரிடம் சட்ட கருத்துரை பெற்றும் உரிய சிரத்தை எடுத்தபிறகுதான் வழக்கில் உள்ள விற்பனைக்கான ஒப்பந்தத்தை நிறைவேற்றிக் கொண்டேன் என்று என்னுடைய முதல்-விசாரணைக்கான ஆணையுறுதியின் 05-ஆம் பத்தியிலும் வழக்கிடை விண்ணப்ப எண் 03/2025-ல் தாக்கல்செய்த எதிருரையின் 09-ஆம்

பத்தியிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் என் சார்பாக வேறு சான்றாளர்களை விசாரிக்க உள்ளேனா என்றால் வேண்டிய-தில்லை. வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் 02-ஆம் பக்கத்தில் கடைசி பத்தியில் 08, 09-ஆம் வரியில் அடைப்பில் சொல்லப்பட்டுள்ள வாசகம் சரிதான். வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் விற்கப்படவேண்டிய நிலத்தின் மொத்த பரப்பளவும் மொத்த விலைபணத்தின் அளவும் திட்டவட்டமாக நிருணயம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நிருணயம் செய்யப்பட்டுள்ளது. இடர்பாடுகளை தவிர்க்கதான் அதாவது இடத்தை அளக்கும்போது இடம் அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால் அதற்கு ஏற்றப்படி பணத்தை கூட்டியோ குறைத்தோ கொடுப்பதற்காக அந்த வாசகம் எழுதப்பட்டது.

வழக்குச் சொத்து உள்ள பகுதியில் தேசிய நெடுஞ்சாலை துறையினர் நிலத்தை கையகப்படுத்துவதற்காக 2003-ஆம் ஆண்டு அறிவிக்கை வெளியிட்டு இருந்தனர் என்றும் அதனால்தான் வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் 02-ஆம் பக்கத்தில் 08-ஆம், 09-ஆம் வரிகளில் கண்ட நிபந்தனை கூறுகள் புகுத்தப்பட்டன என்றால் சரியல்ல. அந்த வாசகம் இது போன்ற ஒப்பந்தங்களில் வழக்கமாக எழுதப்படும் ஒரு வாசகம் ஆகும். நான் வேறு இந்த வழக்கில் உள்ள விற்பனைக்கான ஒப்பந்தங்களை இல்லாமல் வேறு நபர்களுடன் விற்பனைக்கான ஒப்பந்தங்களை செய்து-கொண்டுள்ளேனா என்றால் செய்துகொண்டுள்ளேன். அதில் இதுபோன்ற ஒரு வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. அதுபோன்ற ஒப்பந்தங்களை தாக்கல்செய்ய முடியுமா என்றால் கிரயம் செய்துகொண்டதால் முடியாது.

2003-ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலை துறையினர் வழக்குச் சொத்தில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்ததை நான் நேரடியாகவோ வழக்குரைஞர் மூலமாகவோ தெரிந்துகொண்டேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. 07.08.2003-ஆம் தேதியிட்ட S.O.910 (E) என்ற இந்திய நடுவனத்தின் அரசிதழில் 14-ஆம் பக்கத்தில் சிக்கன்னபட்டி ஊர் புல எண் 20/1A1, 21/9B1 ஆகியன குறிப்பிடப்-பட்டுள்ளன என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் கண்டுள்ள மொத்த பரப்பளவு 12.86 ஏக்கர் நிலத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு மொத்த பரப்பளவு 12.43 ஏக்கர் நிலம் மட்டும் எஞ்சி இருந்தது என்றால் தேசிய நெடுஞ்சாலை துறையில் எவ்வளவு இடம் எடுத்தார்கள் என்று எங்களுக்கு சரியாக தெரியாது. அதற்காகதான் 02-ஆம் பக்கத்தில் 04-ஆம் பத்தியில் கண்டுள்ள இதற்குமுன் சொல்லப்பட்டுள்ள வாசகம் எழுதப்பட்டது.

வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணம் பதிவுசெய்யப்பட்ட விற்பனை -க்கான ஒப்பந்தம் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை துறையினர் கையகப்படுத்திய பிறகு உள்ள பரப்பளவை பொறுத்தும் அதன் விலை பணம் பொறுத்தும் கூடுதல் விற்பனைக்கான ஒப்பந்தம் ஏதையேனும் எழுதிக்கொண்டோமா என்றால் இல்லை. வழக்குரையின் 05-ஆம் பத்தியில் Geetika International -என்ற நிறுமம் 12.11.2010-ஆம் தேதியிட்ட அறிவிப்பு அனுப்பியது சம்மந்தமாக சொல்லியுள்ள சங்கதிகள் சரிதான். அது பொய்யான அறிவிப்பு என்று எனக்கு தெரியுமா என்றால் அப்படிதான் எங்களுக்கு ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தவர்கள் சொன்னார்கள். அவர்கள்-தான் சொன்னார்கள் என்று குறிப்பிட்டு வழக்குரையின் 05-ஆம் பத்தியில்

சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல்விசாரணை ஆணை-யுறுதியில் 08-ஆம் பத்தியில் மேற்சொன்ன சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய முதல்விசாரணையின் 08-ஆம் பத்தியில் … அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிகள் 15.01.2011-ஆம் தேதியன்று வாதியை நேரில் அனுகி என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். அதுபோன்ற வாசகம் வழக்குரையில் உள்ளதா என்றால் இல்லை. கால நீட்டிப்பு வாசகத்தை எந்த இடத்தில் வைத்து எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் 03-ஆம் பக்கத்தின் பின்பக்கம் உள்ள கால நீட்டிப்பு வாசகம் அதாவது வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணம் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 15.01.2011 என்று தலைப்பில் எழுதப்பட்டுள்ள எழுத்தும் வாசகத்தின் நடுவே 15.01.2011 என்று எழுதப்பட்ட எழுத்தும் வேறுபடுகின்றன என்றால் இல்லை. அதில் எழுதியதும் சான்றொப்பம் இட்டதும் S.ஸ்ரீதரன் என்று குறிப்பிடப்-பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் S. ஸ்ரீதரனின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அவரை பிரதிவாதிகள்தான் அழைத்து வந்தனர். அவரை பிரதிவாதிகள்தான் அழைத்து வந்தார்கள் என்று வழக்குரையிலோ முதல்-விசாரணையிலோ சொல்லவில்லை. S.ஸ்ரீதரன் என்று எழுதப்பட்டுள்ள எழுத்தும் கால நீட்டிப்பு வாசக எழுத்தும் வேறுபடுகிறது என்றால் இல்லை. கால நீட்டிப்பு வாசகத்தில் என் கையொப்பம் இல்லை. வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணமான மேற்சொன்ன கால நீட்டிப்பு வாசகத்தில் பிரதிவாதிகளின் கைரேகையோ என்னுடைய கைரேகையோ இல்லை என்றால் சரிதான். அதில் விற்கப்படும் இடத்தின் மொத்த பரப்பளவு குறித்தோ மொத்த விலை பணம் குறித்தோ வாசகம் இல்லை என்றால் சரிதான். Geetika International

என்ற நிறுமம் 12.11.2010-ஆம் தேதியிட்ட அறிவிப்பு அனுப்பியதால்தான் வாதி தரப்பு 02-ஆம் சான்றாவணத்தை பிரதிவாதிகள் நிறைவேற்றி கொடுத்ததாக வழக்குரையிலும் முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். Geetika International - என்ற நிறுமம் 2011-ஆம் ஆண்டுதான் ஆரம்பிக்கப்பட்டது என்று அந்த நிறுமத்தின் இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறுதான் உள்ளது. அந்த நிறுவனத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

என்னுடைய கணவரின் Visiting Card -ல் Chartered Accountant மற்றும் Chairman of Paavai Institution என்று உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரே முகவரிதான் உள்ளது என்றால் சரிதான். அந்த முகவரியில்தான் Paavai Construction உள்ளது என்றால் சரிதான். வீட்டு மாடியில் இரண்டும் உள்ளன. அதில் Vnr2k10@gmail.com என்று உள்ளது என்றால் சரிதான். அந்த அட்டை மிகவும் பழமையானவை. மேற்சொன்ன மின் அஞ்சல் முகவரிக்கு பிரதிவாதிகள் 21.12.2010-ஆம் தேதியன்று ஓர் அஞ்சல் அனுப்பினார்கள் என்றும் அதில் Geetika International நிறுமத்துடன் தங்களுக்கு பணம் கொடுத்து வாங்கும் நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை என்றும் கடன் நிலுவை எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டு அதற்கான ஆவணங்களை சேர்த்து அனுப்பியிருந்தனர் என்றும் சொன்னால் அந்த மின் அஞ்சலுக்கும் எனக்கும் சம்மந்தமில்லை.

(நீதிமன்ற நேரம் முடிந்துவிட்டதால் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge, Salem.